**செய்தி வெளியீடு எண் : 1191** **நாள் : 15.07.2022**

**செய்தி வெளியீடு**

துணிநூல் பிரிவின்மீது கூடுதல் கவனம் செலுத்துவதற்காக தனி தணிநூல் இயக்குநரகம் உருவாக்கப்படும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, அரசாணை எண்.112 நாள்.23.10.2021–ல், **"துணிநூல் இயக்குநரகம்"** தனியாக உருவாக்கப்பட்டு 23.10.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், இன்று (15.07.2022) எண்.34, கதீட்ரல் தோட்ட சாலை, நுங்கம்பாக்கம், சென்னை–600 034 என்ற முகவரியில் இயங்கி வரும் கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தி கழகத்தின் கட்டிடத்தில் உள்ள முதல் மற்றும் இரண்டாம் தளங்களில் **"துணிநூல் துறையின் ஆணையரகத்திற்கு புதிய அலுவலகம்" மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் திறந்து** வைத்தார்.

இவ்விழாவில், அரசு முதன்மை செயலர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள், துணிநூல் துறை ஆணையர் முனைவர்.மா.வள்ளலார், இ.ஆ.ப., அவர்கள், கைத்தறி ஆணையர் திரு.த.பொ.ராஜேஷ், இ.ஆ.ப., அவர்கள், கதர் கிராம தொழில் வாரிய முதன்மை செயல் அலுவலர் திரு.பொ.சங்கர், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தி கழக செயல் இயக்குநர் திரு.என்.ஸ்ரீதர் அவர்கள் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in